The Registrar of Books,
Madras 6.

பதிவு எண் —M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு : சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

| கிளை–ரு | குருகுலம், மாம்பாக்கம் ; விகிருதி, பங்குனி ; 6—4—51. | தளிர்–உரு |
|---|---|---|

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

## குருகுலத்துக்கு வாழ்த்து

கன[illegible]கனார் அவர்கள் திருமுன்,

வணக்கம்; தங்கள் அன்புக்கும் ஆதாவுக்கும் என் அன்பு கனிந்த நன்றி.

நீங்கள் கலையை வளர்க்கும் வள்ளல். சேவை மனப் பான்மை உங்கள் இலக்கு. உங்கள் வெற்றிப் பாதையில் உங்களுடன் சிறிது செல்ல வாய்ப்புக் கிடைத்தது. அது என் நல்வினையே.

உங்கள் பள்ளியின் ஆசிரியர்கள் நல்ல உழைப்பாளிகள். நேர்மையான பயிற்சி பெற்றவர்கள். ஏனையோர் அவர்களுடன் ஒத்துழைக்கிறார்கள். பள்ளி வளர்ந்து வருகிறது. இன்னும் வளர்வதாக!

உங்கள் குருகுல வளர்ச்சிக்கு உங்களுக்குப் பக்கத் துணையாக இருக்கும் உங்கள் பள்ளிச் செய்தியாளர் அவர்களுக்கும் என் நன்றி!

வாழ்க கலைச்செல்வம் ;

ஓங்குக குருகுலம் !

(ஒப்.) S. R. தியோடர்,

பள்ளித் துணைக் கண்காணிப்பாளர்.

# - அறிவின் பயன் -

[ பா. வரதராசனார் ]

அக்காலத்தில் (கி.மு. 490) பாரசீக அரசு பேரரசாகத் திகழ்ந்தது. உள்நாட்டு ஒற்றுமையின்மையால் பிளவுபட்டிருந்த அயலாசாகிய யவனத்திற்கும் (கிரேக்கம்) பாரசீகத்திற்கும் உள்ள பெரும் பகையால் அடுத்தடுத்துப் போர் மூண்டு கொண்டிருந்தது, அத்தகைய ஒரு போரில், புகழ் பெற்ற பாரசீகப் பேரரசனான 'டாயஸ்' என்பவன் கி.மு. 490ல் யவனர்களால் 'மராதோன்' (Marathon) என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டான். அதன்பின் 'டாயசு'க்குப்பின் பாரசீக அரசின் பட்டத்திற்கு வந்த 'செர்செஸ்' (Xerxes) என்பவன் கி.மு. 480ல் யவனருடன் போர் செய்ய ஆயத்தமானான்.

மன்னர் மன்னனாகிய 'செர்செஸ்' தன் பெரும் படையைச் சிறிய ஆசியா (Asia Minor) வழியாகவும், 'டார்டனல்ஸ்' வழியாகவும் ஐரோப்பாவுக்குத் திரட்டிச் சென்றான். அவனது பெரும்படை 'டார்டனல்ஸ்' என்னுமிடத்தில் ஒரு பெரிய பாலத்தைக் கடந்துகொண்டிருந்தது. அப்போது 'செர்செஸ்' அருகிலிருந்த ஒரு குன்றினுச்சியில் சலவைக்கல்லாலான ஓர் சரியாசனத்தமர்ந்து தன் படைகள் பாலத்தைக் கடந்து செல்வதை ஊன்றிக் கண்ணுற்றுக் கொண்டிருந்தான்.

இந்த வரலாற்றை எழுதிய புகழ் பெற்ற பண்டை யவன வரலாற்றாசிரியரான 'ஹெரடோடஸ்' என்பவர் இந்த இடத்தில் பின்வருமாறு கூறிச் செல்கின்றார் :—

“ஹெல்லஸ்பாண்ட்” (Hellespont) இந்தப் பெயரால்தான் 'டார்டனல்ஸ்' அந்தக் காலத்தில் அழைக்கப்பட்டது.) முழுதும் மரக்கலங்களும், கடற்கரையும் அதையடுத்த சமவெளி முழுதும் படைகள் நிறைந்திருந்ததைக் கண்ணுற்ற 'செர்செஸ்' தன்னுடைய மகிழ்ச்சியை வெளியிட்டான். பிறகு உடனே அழத் தொடங்கினான். அவனருகிருந்த அவன் சிறிய தந்தை இதைக் கண்ணுற்றதும் அரசனை நோக்கி வினவினதாவது :—

'ஓ அரசனே. இப்போதும் சிறிது நேரத்துக்கு முன்னும் நிகழ்ந்த உன் செயல்களுக்கு எவ்வளவு வேற்றுமையுள்ளது. உன் மகிழ்ச்சியை வெளியிட்ட நீ இப்போது கண்ணீர் விடுகின்றனையே?' 'செர்செஸ்': 'ஆம், இவ்வளவு பெருங்கூட்டத்தில் ஒரு நூறு ஆண்டுகள் கழிந்த பின் ஒரு மனிதனும் வாழான் என்பதை எண்ணும் போது, மனிதனுடைய வாழ்க்கை முழுமையும் எவ்வளவு குறுகியது என்ற நினைவு, நன்கு சிந்தித்த பின் என் உள்ளத்தெழுந்ததனால் மேலிட்ட இரக்கமே அழுகைக்குக் காரணம்!”

'செர்செஸி'ன் இக்கூற்று நம் சிந்தனைக்கு விருந்து. கருத்தூன்றி எண்ண எண்ண அதன் உண்மை எப்படி நம் நெஞ்சத்தைத் தொடுகின்றது.

உயர்ந்த ஓரிடத்தே அமர்ந்து வலிமை மிகுந்த தம் படை வீரர்களின் அணிவகுப்பை ஒருங்கே கண்டு அதன் பெருமையில் களிப்புற்றிருந்த அம்மன்னன் மறு வினாடி உண்மையை உணர்ந்து புலம்பியது அவனது அறிவின் தெளிவை உணர்த்துகின்றது. எவ்வளவு வன்மை மிகுந்த படையும் ஒரு காலத்தில் இடந்தெரியாது அழியும் இயல்பு, பல உண்மைகளை உணர்த்தி இருக்க வேண்டும். நாகரீகத்தில் தலை சிறந்த ஓர் ஒப்பற்ற பேரரசின் வன்மை மிக்க படையானாலும் உண்மைக்கு விலக்காமோ ?

ஆம்! மனிதனியல்பு மட்டுமன்று; ஏனைய சிற்றுயிர்களினியல்பும் காணப்படும் உலகியல் பண்டங்களினியல்பும் இதை ஒத்தே இருக்கின்றன வானாலும் இவைகளில் மிகுதியாக இரங்கத் தக்கவன் மனிதனே யாவான். அவன் வாழ் நாளில் மேற்கொள்ளும் 'முயற்சி'களும் அவைகளுக்காகக் கட்டும் மனக் கோட்டைகளும் எத்துணை! எத்துணை !

இன்று நாம் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியின் தொடக்கத்திலிருக்கின்றோம். பகுத்தறிவு வளர்ச்சியில் முன்னேற்ற மடைந்தவர்களாக எண்ணி மகிழ்கின்றோம். அறிவு வளர்ச்சியின் பயன் அறியாமை நீங்கி அமைதியும் இன்பமும் மிகுந்திருத்தலென்பதற்கு ஆராய்ச்சி வேண்டுவதில்லை. ஆனால் இன்றைய நம் அமைதியும் இன்பமும் எத்தகையது? இதைக் கொண்டு நம் அறிவின் முன்னேற்றத்தை அளவிட, நமது நிலை புலனாகுமன்றோ ?

நம் பண்டைய முன்னோர்களை விட நாம் எல்லாத் துறையிலும் முன்னேறி மிக்க நாகரிகமாக வாழ்வதாக நம் எண்ணம். உண்மை முன்னேற்றம், நாகரிகம் என்பன எவை என்பது தெளிந்தால் நம் நிலை நமக்குப் புலனாகும். நம் கல்வியும், அறி

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)


## கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி !

## — N. K. M. —

## தங்க நாடா

( பதிவு )

எண் 20 முதல் 100 வரையில் வேட்டி, சேலை, துண்டு, போர்வை, மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.

நூலாடைகட்கும்
பட்டாடைகட்கும்

நம்பிக்கையான இடம் :

கருப்பண முதலியார்
ஸ்டோர்ஸ்,

துணி வாணிபம்,

53, கிடங்குத் தெரு, சென்னை 1.

# பெரிய புராணம்

களை யெடுத்த பின் நெற் பயிர்கள் ஓங்கி வளர்ந்தன. அவற்றில் செஞ்சாலி நெல் விதை தலைமை யானது. தனக்கு வேறு பயிர் நிகரில்லை என்னும்படி அவை தன்மையிலும் அளவிலும் வளர்ந்துள்ளன. முளையில் வெண்மையா யிருந்து பின் பசுமையாய்த் தழைத்துக் கடைசியில் செம்மையாய்ப் பொன்னிற மேறிச் செஞ்சாலிகள் சிறந்தன. கரு முதிர்ந்த பசுஞ் சுருள் பின்னர் விரிந்து, கதிர்களாகி, அரனடியார் உள்ளம் உருக்கத்தால் அசைந்தாடுதல் போலச் சாய்ந்தாடின.

அன்பின் வயப்பட்டு இறைவனுக்குத் தொண்டராய் விளங்கும் அடியார் தாம் ஒருவரை யொருவர் சந்திக்குங்கால் தலை வணங்கி வணக்கம் தெரிவிப்பது போல, வரிசை வரிசையாய் விளைந்து செழித்த செஞ்சாலிக் கதிர்கள் தலை வளைந்து வணங்கி நிற்கும்; பணிவுடைய அப்பெரியோர், தம்மிடம் திறமையும் பெற்றிருப்பார்; அது போலச் செஞ்சாலிப் பயிர் தம்மிடம் செறிவாக நென் மணிகளும் நிரம்பியிருந்தன.

பழுத்த நிலையில் கதிர்கள் அரி யரியாக அரியப் பெற்று அடுக்கிக் கட்டப் பெற்றன; அந்தக் கட்டுகளே மலையடுக்குகள் போற் காணப்பட்டன. கட்டுகள் ஓரிடத்தில் குன்று போலப் போடப்பட்டு நெல் மணிகள் அவற்றின் உச்சியில் மின்னுவது குன்றுகளின் உச்சியில் விண் மீன்கள் மின்னுவது போலத் தோன்றிற்று. சங்கு தந்த முத்துக்களை அடையாளமாக நெற் போர் மேல் வைத்து மேன் மேலும் ஒளி மலை போல் அவற்றை உயர்த்துவர் உழவர். மலர்த் தண்டுகளால் நெற் போர்க் கட்டுகளைப் பின்னி விட்டமையால், மலர்களிலிருந்து தேன் ஒழுகிய காட்சி, மலையிலிருந்து அருவி யொழுகுவது போலத் திகழ்ந்தது. களத்து மேடுகள் சோழநாடு முழுதும் இவ்வாறு காட்சி தந்தன!

மலை போன்ற நெற் போர்களைப் பின்பு சாய்த்துத் தள்ளி, எருமைக் கடாக்களின் காலடியில் இட்டுப் பிணை யோட்டும்போது, கரிய பெரிய எருமைக் கடாக்கள் நெற்றாள் மேல் சுற்றி வரும் வட்டக் காட்சி, உயர்ந்த மலைச்சாரலில் கருமுகிற் கூட்டம் வட்ட மிட்டுச் செல்வது போல் இன்பம் பெருக்கும்.

வைக்கோலை உதறி மழைப் பெயல் போல் நென் மணிகளைத் தூற்றி, பொன் மலையோ பனி மலைகளோ என்று வியப்புணர்வு பெருகும்படி நிறத்துக் கேற்ப நெற் குவியல்களை வேறு வேறு வானமளாவத் திரட்டி வைப்பர். நீர் சூழ்ந்த நாடாகிய மருத நிலம், இதனால் மலை சூழ்ந்த நாடாகிய குறிஞ்சி நிலம் போலத் தோற்றும்.

விளைந்த நெல்லில் அரசியலுக் குரிய கடமையைத் தந்த பின் நாட்டு நலத்துக்குகாக வழங்க வேண்டிய அறங்களைப் பெரு மதிப்புடன் உழவர் வழங்குவர்; கடவுள் வழிபாட்டுக்கு ஒரு பகுதி எற்பிப்பர்; சான்றோர்க்குக் காணிக்கை செலுத்துவர், விருந்தினரைப் புரப்பர்; உறவினரைத் தாங்குவர். இக் கடமைகளுக் குரிய பகுதிகளை யெல்லாம் உள்ளன்புடன் வழங்கிய பின், மிகுந்ததைத் தன் குடும்பத்துக்கு எடுத்துக் கொள்வர். இதனால் குடிகள் மேலு மேலும் நலம் விளங்கிச் செழித்து மலை போல மாட மாளிகைகள் பெருகிச் சோழ நாடு முழுதும் நகரங்கள் மலர்ந்து நின்றன.

நாட்டு மக்கள் அவரவர் செய்கைகளில் இதனால் ஊக்கமுற்றுச் சுறு சுறுப்பா யிருந்தனர், சோலை யிடங்களில் கருப்பஞ்சாறு காய்ச்சுவோர் அது செய்துகொண்டிருப்பர்; இல்லத்தில் மாதர்கள் தம் கூந்தலி லிருந்து வண்டுகள் நீங்கவும் எங்கும் மணமும் தூய்மையும் உண்டாகவும் அகில் புகைப்பர். சான்றோர் வேள்விச் சாலைகளில் வேள்வி யியற்றுவர். இச் செய்கைகளால், மேகக் கூட்டங்களோ என்னும்படி புகை மண்டலம் சோலைகளிலும் மாளிகைகளிலும் சூழ்ந்து திரியும்.

நீர் நலத்தால் சோழ நாடு மிகச் சிறப்பான இயற்கைக் காட்சிகளையும் ஒழுக்கச் சிறப்புகளையும் பெற்றுத் திகழ்கின்றது.

தென்னை, செருந்தி, நாரத்தை மரங்களும் அத்தி முதலிய பூவாது காய்க்கும் மரங்களும் பலவகைப் பச்சிலை மரங்களும், பனை, சந்தனம், நாகம், வஞ்சி, காஞ்சி, கோங்கு மரங்களும் மா, பாதிரி, சுரபுன்னை, குங்குமம், குருக்கத்தி மரங்களும், சாள மரமும், மகிழ மரமும், சண்பகம், தாழை, கமுகு, புன்னை மரங்களும் அங்கங்கும் நிறைந்து அழகுறத் தோன்றும்,

சோழநாட்டில் எங்கும் மங்கலச் செயல்களும், திருமண ஆரவாரமும் நிகழும். பெண்களின் தாமரை முகங்களும், குழந்தைகளின் இன்னிசைப் பண்களும் கண்ணுக்குங் காதுக்கும் விருந்தாவன. ஒளி மிகுந்த மணிக் கலன்களும்; மலர்ப் பந்தர்களும் நாட்டின் செழுமை தேற்றும். இவ்வாறு நாட்டின் மருதப் பரப்பு முழுதும் திருமகள் உறையும் சூழலாய்ப் பொலிவுறும்.

அண்ணாந்து வானத்தை நோக்கினால் யானைக் கூட்டங்கள் போன்ற மேகப் படலமும், குனிந்து கீழே நோக்கினால் மேகக் கூட்டங்கள் போன்ற யானைத் திரளும் காட்சி யளிக்கும். வேத நூல் நிலயங்களும் அதனை ஓதுங் கூடங்களும் அங்கங்கும் உண்டு. வேள்விகளும் அவற்றின் சடங்குகளும் எங்கும் நிகழும், நாடு முழுதும் புற இன்பமும் அக மகிழ்வும் ஊர்த் தெருக்களில் ஊசல் அசையும்; ஊர்ப்புறங்களில் 'யோக'மும் தவமும் நிகழும். புண்ணிய முனிவர் எங்குந் திகழ்வர். இங்ஙனம் பொருள் நுகர்வுகளும் அறிவு விளக்கங்களும் நிழலாடும.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD, COIMBATORE.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.



| இலை | விகிருதி, பங்குனி | தளிர் |
|---|---|---|
| 3 | 6-4-51 வெள்ளி | 25 |



## - - மும்முரம் - -

செயல்கள் நன்றாய் நடைபெறுவதற்கும் நிறைவேறுவதற்கும், அவை மும்முரமாக நிகழவேண்டும். மும்முரங் கொள்ளாத எதுவும் ஊனமடையும்.

தமிழ் நாட்டுப் பண்புகளில் மும்முரம் என்பதும் ஒன்று; பொதுவாக இதனை 'ஊக்கம்' என்றும் கருதுவர். மாந்தர்க்கு உரம் என்பது ஊக்கந்தான். முவ்வுரம், மும்முரம் என வழங்குகின்றது.

அறிவுக் கிளர்ச்சி, செய்கைக் கிளர்ச்சி, விருப்பக் கிளர்ச்சி என்னும் மூன்று வகையான உந்துதலும் சேர்ந்து தொழிற் படும்போது, முவ்வுரமாக அதாவது மும்முரமாகச் செயல் நிகழ்கின்றது.

அறிவு இல்லாமல் செய்கை திறமை கொள்ளாது; விருப்பமும் பயன் மிகாது; செயல் திறம் இல்லாமல் வெறும் அறிவும் விருப்பமும் கவைக்கு உதவா; விருப்பம் இல்லாமல் செய்கையும் அறிவும் ஆற்றல் கொள்ள மாட்டா. ஆகவே, மூன்றும் வேண்டும்.

இந்த மூன்று வல்லமைகளும் மூன்று உரங்கள் எனப்பட்டன. தமிழ் நாட்டு மக்கள் இந்த மும்முரத்தில் நன்கு பழகி வந்திருக்கின்றனர். பொருளியல், அரசியல், கலையியல் முதலிய பல வேறு துறைகளிலும் அருளியலிலும் நடவடிக்கை யெடுப்போர் ஒவ்வொருவரும் இம் மும்முரப் பண்புகளில் பெரிதுங் கருத்து வைத்து நடந்து வந்திருக்கின்றனர்.

தமிழர் கண்ட இம் முவ்வுரத்தின் பிழம்பே, தமிழ்க் கடவுளாகிய முருகவேள்! உயர்ந்த பண்புகள், கடவுள் பண்புகள்! ஆகவே, மும்முரப் பண்புகள் முருகவேள் பண்புகள்!

சிவபிரான், தவ வடிவினன்; முருகவேள் செயல் வடிவினன்; ஆதலால், 'முருகு' என்னுந் தெய்வப் பண்பும் அதன் பெயரும் முவ்வுரத்தன்மை வாய்ந்தது.

உகரம் உரமுள்ள எழுத்து; அதனாலேதான் அதனைச் 'சக்தி எழுத்து' என்று அருள்நூல் வல்லுநர் கூறுகின்றனர். அகரம் இருப்பு மாத்திரை உணர்த்தும் எழுத்து, உகரம் வல்லமை உணர்த்தும் எழுத்து எனப்படும்.

முவ்வுரம் எனப்படும் முற்கூறிய மூன்று வல்லமைகளை மூன்று உகர எழுத்துக்களால் குறித்து, அவ் வல்லமைகளின் மெல்லின இடையின வல்லினப் பண்பு தோன்ற 'ம்ர்க்' என்னும் மெல்லின இடையின வல்லின மெய்களுடன் சேர்த்து 'முருகு' என்னும் ஒரு பெயரை மும்முரச் செயலாளரின் பெயராக இட்டு மகிழ்ந்தனர் முன்னோர்.

தமிழ் நாட்டுச் செயன்முறைப் பழம் பண்பு இங்ஙன மெல்லாம் தெய்வக் காட்சியாகவும் உருவுற்று, வாழ்வளித்து வருகின்றது. அதனால், முருகக் கடவுளுக்கு விருப்பம் என்னும் 'இச்சை'யும், அறிவு என்னும் 'ஞான'மும், செய்கை என்னும் 'கிரியை'யுமாக மூன்று வல்லமைகள் அதாவது மூன்று 'சக்தி'கள் கூறப்படுகின்றன.

வாழ்வுக்கு இம் மும்முரப் பண்பு, அதாவது முருகுப் பண்பு வேண்டும். அதற்கு வழிகாட்ட முருகவேள் அருள் நூல்கள் ஏராளமாகத் தமிழில் உள்ளன.

நூல்களை நன் முறையில் அமைத்துக் கொண்டு, ஒழுங்காகவும் உள்ளுணர்வோடும் பயின்று பயின்று, மக்கள், மும்முரப் பண்பை எய்துதல் நல்லது! முருகவேள் அருள் பெறுதல் என்பது, இம் மும்முரப் பண்பை அடைந்து, வாழ்க்கையைச் செய்கை யுருவமாக ஆக்கிக் கொள்வதுதான்; ஆக்கிக் கொண்டு, செய்கை வீரராக விளங்குவது தான்!

தமிழ் மக்கள் மும்முரங் கொண்டால் உலகமே பண்படையும்; இடர் நீங்கி நன்மை மிகும்!


எதிர்பார்த்த நலம்!
உருவான செய்கை!
பல நூற்றாண்டுகளுக்குப் பின்
கிடைக்கப் பெறுகிறோம்!

திருப்புகழ் முதலிய
முருகவேள் அருள்நூல்கள்
**தெளிவான - -**
**- - உரையுடன்**

உரையாசிரியர்:
தணிகை மணி
திரு. வ. சு. செ. அவர்கள்.

குறிப்பு:-10-4-51 க்குள் மாம்பாக்கம் குருகுலத்தில் (மதுராந்தகம் அஞ்சல்) ரூ. 1-0-0 செலுத்தித் தம் பெயரைப் பதிவு செய்து கொள்வோர்க்குப் பகுதி ஒன்று ரூ. 1¼ விலைக்குக் கிடைக்கும் (அஞ்சல் செலவு வேறு).

# 'நற்றிணை' அழகு

[R. G. பிள்ளை B. A.]

பெருவழுதி என்னும் புலவரால் பாடப்பட்ட பின் வரும் பாடல் நற்றிணையின் கவிதை நயத்திற்கு மற்றுமோர் எடுத்துக் காட்டாகும்.

கற்பனை வன்மை யில்லாதவன் கவிஞனாக முடியாது. கற்பனை வெறியில் தான் சுழலும் பொழுது, குணங்குறி யிறந்த வெறும் பாழிற்கும் இடம் பெயரளிப்பான் கவிஞன் என்கிறார் ஷேக்ஸ்பியர்.

பற்பல கூறி கற்பனைப் பொருளை விளக்குவதை விட, அதைச் சுருங்கக் கூறி விளங்க வைத்தல் கவிஞனது ஆற்றலுக் கோர் அணியாகும். பெருவழுதி, கீழ் வருஞ் செய்யுளின் ஈற்றடிகளில், "மடுத்த சாந்த ஞெகிழி காட்டி யீங்காயின" என்னும் சில மொழிகளைச் சொல்லிப் பல் வேறு கருத்துக்களைப் படிப்போர் உள்ளங்களில் எழுப்புவதை நினைக்க நினைக்க நம் முள்ளம் பூரிப் படைகிறது.

"ஓங்குமலை நாட ஒழிகநின் வாய்மை;
காம்புதலை மணந்த கல்லதர்ச் சிறுநெறி
உறுபகை பேணா திரவின் வந்திவள்
பொறிகிள ராகம் புல்லத், தோள் சேர்பு
அறுகாற் பறவை அளவில மொய்த்தலின்
கண்கோ ளாக நோக்கிப் பண்டும்
இனையை யோவென வினவினள் யாயே;
அதனெதிர் சொல்லா ளாகி அல்லாந்
தென்முக நோக்கி யோளே அன்னாய்
யாங்குணர்ந் துய்குவள் கொல்லென, மடுத்த
சாந்த ஞெகிழி காட்டி
ஈங்கா யினவா லென்றிசின் யானே.

தலைவன் மலை நாட்டவன். நெடு நாளாய்த் தலைவியை வரைந்து கொள்ளாது அவளுடன் களவொழுக்கத்தில் ஈடு படுகிறான்.

ஒரு நாளிரவு, தலைவியைக் காண அவன் புறப்படுகிறான். செல்ல வேண்டிய வழியோ மிகக் காடு முடானது; கற் பாறைகள் நிறைந்தது. அந்நெறியில் மூங்கில்கள் நெருங்கி யுள்ளன. வழியும் குறுக லானது. இரை தேடி யுழலுகின்ற புலி, கரடி, முதலிய கொடிய விலங்குகள் அவ் வழியில் தலைவனுக்குப் பெரும் பகையாயுள்ளன.

தலைவியை நாடி யோடுகின்ற தன் மன வேகத்தில் தலைவன் இவ் விடைஞ்சல்களைப் பொருட் படுத்தவே யில்லை. குறித்த விடத்திற் சேர்ந்து தலைவியை அவன் சந்திக்கிறான்.

தலைவியின் ஆகம் ஐம்பொறிகளையும் அலைக்கின்ற எழில் நலம் வாய்ந்தது. தலைவனது மெய், வாய், கண், மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளும் தத்தம் புலனுகர்ச்சியை நாடித் தலைவிமேற் பாய்ந்தன. "கண்டு கேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம் புலனும் ஒண்டொடி கண்ணே யுள" என்ற திருக்குறளுக் கிலக்கானாள் தலைவி. இருவரும் முயங்கி இன்புற்றார்கள், தலைவன் பிரிந்தான். தலைவி தன் வீடு திரும்பினாள்.

மறுநாட் காலை தலைவியும் தோழியும் கூடிப் பேசும் சமையத்தில் தலைவியை ஈன்றெடுத்த நற்றாய் அங்கு வருகிறாள். நிகழ்ச்சியிடம் சமையலறை.

தலைவியின் இரு தோள்களிலும் அளவிறந்த வண்டுகள் மொய்த்திருப்பதை, நற்றாய் கண்டாள். புது மணம் நோக்கி வண்டு மொய்த்தலை அன்னை அறிவாள். இச்சிறுமி களவொழுக்கத்தில் நெடு நாளாய் ஈடு பட்டிருக்க வேண்டு மென்று நற்றாய் ஐயுற்றாள்.

அவள் கண்கள் சிவந்தன. தலைவியைத் தன் கண்களாற் கொல்லுவாள் போல நோக்கினாள். நோக்குடன் நில்லாது, "நீ இதன் முன்னும் இப்படி வண்டுகளான் மொய்க்கப் பெற்ற தோளினை யுடையையோ?" என்றும் வினவினாள்.

அச்ச மிகுதியால் தலைவிக்கு விடை கூற வாயெழவில்லை. உள்ளத்தில் வருத்தம் மேலிட்டது. அருகில் நின்ற தோழியைத் தலைவி நோக்கினாள்.

தோழி மிகக் கெட்டிக்காரி. "நற்றாய் கேள்விக்கு இவள் எவ்வாறு விடை சொல்லி உய்வாள்? தலைவனோடு தான் முயங்கியதை எவ்வாறு அவள் மறைக்க முடியும்? இவள் தோள்களில் மொய்க்கும் வண்டுகள், உண்மையை நற்றாய்க்கு விளக்கி விட்டன. இத்தருணம் நான் தக்கதோர் அமைவு கூறி நற்றாயின் சினத்தையுந் தணித்து, தலைவியின் துன்பத்தையும் ஆற்றுவித்தல் வேண்டும்" என்று அவள் எண்ணினாள்.

அடுப்பி லிடப்பட்டிருந்த ஒரு சந்தன விறகின் கொள்ளியைத் தோழி பிடுங்கினாள். அதை நற்றாய்க்குக் காட்டி, "அன்னாய், அடுப்பி லிடுவதற்கு முன் அதனின் றெழுந்த மணத்தை நாடி அவ்விறகை மொய்த்துக் கொண்டிருந்த வண்டுகள் அதை அடுப்பி லிட்டவுடன் அடுப்புத் தீ அவற்றைச் சுட்டமையால் வண்டினம் விறகை விட்டுச் சிதறிப் பறந்தன. நந் தலைவியின் தோள்களை, மயக்கத்தால் சந்தன விறகெனக் கருதி மொய்த்துக்கொண்டன, இது தான் இங்கு நடந்த உண்மை, தலைவி வேறொன்றையும் அறியாள்" என்று கூறி, நற்றாயை ஏமாற்றி விட்டாள்.

பின்னுமோர் முறை தலைவியை நாடி வந்த தலைவனைக் கண்ட தோழி, "எத்துணைநாள் நீ வரைந்து கொள்ளுதல் காரணமாகப் பொய்கூறி நான் தலைவியை உய்விப்பது? ஓங்கிய மலை நாடனே, நீ கூறும் வாய்மைக ளெல்லாம் நான் கூறுபவை போலப் பொய்த் தொழிவனவாக" என்று வருந்திக் கூறினாள். தோழியின் இக் கூற்று வியத்தற் குரியது.

# தமிழ் மூன்றுந் தா

[முத்துசாமி]

நம் செந்தமிழ் மொழி இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என மூன்று வகைப்படும்; இசைத் தமிழ் என்பது இயல் தமிழோடு இசையும் சேர்ந்தது. நாடகத் தமிழ் என்பது இவ் விரண்டோடு நாடக அமைப்பும் சேர்ந்தது,

இம் மூன்று தமிழிலும் சிறந்த புலமை யுடையோரே நிறைந்த புலமை யுடையவ ராவர். இக் காலத்தில் இயல் தமிழ் ஒன்றையே பெரும்பாலும் கற்கின்றனர். அதிலும் நுண்மாண் நுழை புலம் உடையவர் ஒரு சிலரே. இக் காலத்தில் இசைத் தமிழிலும் நாடகத் தமிழிலும் தேர்ந்தவர்களாய்க் காணப்படுபவர் இயல் தமிழ்ப் புலமை நிரம்பப் பெற்றவர்களாய்க் காணப்பட வில்லை,

தமிழ் இசையே இப்பொழுது தான் அரும்பி மலர்ந்து வருகின்றது. இது காறும் தெலுங்கிலேயே இசை பாடி வந்தனர். படக்காட்சி மலிந்து வரத் தொடங்கிய பின் முன் நாடக முறை சில நலிய நேர்ந்தது.

அண்மையில் விளங்கிய விபுலாநந்த அடிகள் இசைத் தமிழுக்குப் பேருதவி செய்திருக்கின்றனர், அவர் இயல் இசை ஆகிய இரண்டு தமிழிலும் அறிஞர். நம் முன்னோர் இசைக் கருவிகளில் சிறந்தன வாகக் குழலையும் யாழையுமே போற்றி வந்தனர் என்பதையும், அவற்றில் குழல் மட்டுமே இன்று பயன் படுத்தப் பட்டு வருகிறது என்பதையும், யாழ் மறைந்து வேறு வடிவில் வீணை யென்ற பெயருடன் இன்று விளங்கி வருகிறது என்பதையும் அறிந்து, யாழைப்பற்றி ஆராய்ந்து ஒரு சிறந்த நூல் எழுதி உதவியிருக்கின்றனர். தமிழர் அவர் செய்த இப் பேருதவியை மறத்தல் இயலாது.

நாடகக் கலையை இறந்து படாமல் தமிழ் நாட்டில் 'நவாப் இராசமாணிக்கம்' என்பாரும், 'T, K. S' சகோதரர்களும்' பணியாற்றி வருகின்றனர், சென்னையில் T. K. S, சகோதரர்கள் நடித்துக் காட்டிய ஔவையார், நாடகம் மிகச் சிறந்த தா யிருந்தது.

யோகி சுத்தானந்தர், அண்மையில் நவாப் இராசமாணிக்கம் அவர்களும் அவரைச் சார்ந்தவரும் நடத்தி வரும் 'ஐயப்பன்' என்ற நாடகத்தைப் பார்த்து விட்டு, அவர்கள் நடிப்பு மிகச் சிறந்ததா யிருந்தது என்றும், தாமும் பாரதியாரும் வ. வே; சு. ஐயரும் நாடகக் கலையை வளர்க்க எண்ணியதாகவும், அதனை நவாப் இராசமாணிக்கம் நிறைவேற்றி விட்டார் என்றும், நாடகம் என்பது நாட்டை அகமாகக் கொண்டது என்றும், (நாடகம்—நாடு அகம்). அம் முறையில் அதனைப் போற்றி வளர்க்க வேண்டு மென்றும் தாமும் சில நாடகங்கள் எழுதி யிருப்பதாயும் அவற்றை அவர்கள் நடித்துக் காட்டலாம் என்றும் கூறினர்.

நம் இலக்கியங்களில், சிலப்பதிகாரம் ஒரு சிறந்த முத்தமிழ்க் காவியம் என்று அண்மையில் சென்னையில் நடந்த சிலப்பதிகார மா நாட்டில் அறிஞர்கள் பலர் முழக்கினர்.

தமிழர் தங்கள் பெருமையை உணரத் தொடங்கி யிருக்கின்றனர் என்பது சில ஆண்டுகட்கு முன் புற நானூறு மாநாடு நடத்தியதி லிருந்தும் இப்பொழுது சிலப்பதிகார மாநாடு நடத்தியதி லிருந்தும் தெரிகிறது. இவ்வுணர்ச்சியை மேலும் பெருக்கி முத்தமிழ் வளர்ச்சிக்கு வேண்டிய ஆக்க வேலைகளைச் செய்ய வேண்டும்.

சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையை ஓர் இசை நாடகக் களஞ்சியம் எனலாம். அதில் காணப்படும் குறிப்புக்களை நன்கு ஆராய்ந்து தெளிந்து, சிறந்த நூலாய் வெளியிடல் வேண்டும். சிலப்பதிகாரத்தின் இசைக் குறிப்புக்களை நன்கு ஆராய்ந்தால் இன்று இசை யுலகில் வழங்கப்பட்டு வரும் பல குறியீடுகளுக்குத் தமிழ்ப் பெயர்கள் காணலாம். எடுத்துக் காட்டாக, பேராசியர், ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள், சில ஆண்டுகளுக்கு முன்னர் நடத்தி வந்த சிலப்பதிகார வகுப்பிற் கூறியதை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன், 'இந்திர விழவூரெடுத்த காதை'யில் 36வது அடியில் வரும் 'வழித்திறம்' என்னும் சொல் 'ஆலாபனம்' என்பதற்கு நேர்த் தமிழ்ப் பெயர் என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழராய்ப் பிறந்தோர், இயல் இசை நாடகமாகிய முத்தமிழிலும் வல்லவர்களாய் விளங்க முயல வேண்டும். நம் தமிழ்ப் பிராட்டி ஔவை, 'சங்கத் தமிழ் மூன்றுந் தா' என்று தூயவனை வேண்டினர். தமிழ் மூன்றும் நாமும் வேண்டுவோம்.

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை 1.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

வும், பொருளும், நாட்டை இன்ப நிலையிலும் அமைதி நிலையிலும் நிறுத்துகின்றனவா?

அறிவின் எல்லையைப் பகுத்தறிய இயலாது உண்மை அறிவை வளர்த்துச் செல்பவன், தான் அறிவாளி என்று எண்ணி இறுமாப்புறான். ஏனெனில், அறிவு பெருகப் பெருகத் தான் முன்னை அறியாமையின் அளவு தெளிவுறும். இவ்வுண்மையை :—

"அறிதோ றறியாமை கண்டற்றால்" என்ற குறளால் தெளிக.

கற்றுத் தெளியத் தெளிய நம் அறியாமையைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னும் எவ்வளவு அறியாமை நம்மைப் பற்றி இருக்கின்றதோ? எப்படி அறிவது? இன்னும் கற்று 'அனுபவப்பட்டு' அறிந்தால்தானே?

இந்நிலையில் நாம் அற்ப அறிவில் வியப்புற்று அகங்கரித்து வாழத்தலைப்பட்டால் அதன் தீமையை எப்படி அளவிடுவது!

அறிவின் பயன் அன்பும் அறனும், அருளு மென்று நம் பண்டைய ஆன்றோர்கள் தெளிந்து அதற்கொப்ப வாழ்க்கைக் குரிய அற முறைகளை வகுத்தார்கள். மக்கள் உயிர் வாழ்வதே இன்பமும் அமைதியும் பெறும் பொருட்டு. அவ் வின்பம் கற்றுத் தெளிந்து பிற உயிர்கள் பால் அன்பு பூண்டு அருளொடு ஒழுகிப் பெறுவதாகும் என்பது அவர்கள் துணிபு, வெறும் எட்டுக் கல்வி பெற்றுப் பிற மக்களை வஞ்சித்துப் பொருளீட்டி ஏனையோர் துன்புற, தன்னலத்தோடு வாழ்தல் வாழ்க்கை யாகாது. இத்தகையோர் கீழ்க் குறித்த பாரசீக மன்னனது கூற்றை உட்கொண்டு உண்மை தெளிய வேண்டும். உலக வாழ்க்கையின் முடிவு அத்தகையது.

நம் பண்டைய நல்லாசிரியரான நக்கீரரும் :—

"தெண்கடல் வளாகம் பொதுமை
இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை
யோர்க்கும்,
நடுநாள் யாமத்தும் பகலுந்
துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி உடுப்பவை
இரண்டே;
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே,
செல்வத்துப் பயனே ஈதல்,
துய்ப்பேம் எனினே தப்புந பலவே."
(புறநானூறு).

என்று கூறினர்.

"உலகை ஆளும் அரசனானாலும் இரவும் பகலும் உறக்கமின்றி விலங்குகளை வேட்டையாடித் திரியும் கல்வியில்லாத ஒருவனானாலும் அவர்கள் உண்ணுவது ஒரு நாழி அரிசியும் உடுப்பது இரண்டு ஆடைகளுமே யாகும். இவையே யன்றி ஏனைய பிறப்பிறப்பு நுகர்ச்சிகள் யாவும் இவ்வாறே ஒத்தன. ஆதலால், செல்வத்தால் பெற்ற பயன் ஈகை அறங்களைக் செய்தலேயாகும். அன்றி, பிறர்க்குக் கொடாமல் யாமே நுகர்வமென் றெண்ணினால் அதனால் விளைக்கும் தவறுகள் பலவாம்." என்பது இப்பாட்டின் கருத்தாம்.

இங்கே பாருங்கள் அறிவின் பயனை; இன்பத்திற்கு வழியை!

இன்று, பெரிதும் இடருற்று, 'சோஷியலிசம்' போன்ற கோட்பாடுகளை வருந்திப் போதித்து இன்பமும் அமைதியும் காண முன்னிற்கும் உலகம் இதை விட மேலான ஒரு கோட்பாட்டை இவ்வளவு தெள்ளத் தெளிய விளக்க வல்லதாமோ?

## தெள்ளிய மணிகள்

1. கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டு பிடிக்கலாம், தட்டுங்கள் கதவு திறக்கப்படும்.

2. எந்த அளவால் நீங்கள் பிறருக்கு அளக்கிறீர்களோ, அதே அளவால் உங்களுக்கு அளக்கப்படும்.

3. நீதியின் மீது தாக முடையவர்களா யிருங்கள், நீங்கள் மன நிறைவு கொள்வீர்கள்,

4. இரண்டு தலைவர்களுக்கு ஊழியம் செய்ய எவராலும் முடியாது; கடவுளுக்கும், உலகப் பொருளுக்கும் ஒருங்கே உங்களால் சேவை செய்ய முடியாது.

5. 'தியானம்' செய்வதனால் மட்டும் ஒருவனுக்கு நன்மை சித்திப்பதில்லை, கடவுளின் சித்தப்படி நடப்பவனுக்கு மட்டுமே அது சித்திக்கும்.

6. அயலார்க்குச் சேவை செய்பவன் ஆண்டவனுக்கே சேவை செய்கிறான். தன்னைக் காக்க முயல்கின்றவன் மரிக்கிறான். தன்னை இழப்பவனே அழியாப் பெருநிலையில் வாழ்கிறான்.

7. எவன் பணிகிறானோ அவனே உயர்கிறான்.

8. உன் கண் தெளிவாக இருந்தால் உடல் முழுவதும் வெளிச்சமிருக்கும்; உன்னிட முள்ள வெளிச்சம் இருளடையாமல் பார்த்துக் கொள்.

9. மனிதன் உணவினால் மட்டும் வாழ்வதில்லை; ஆண்டவனுடைய அருளால் வாழ்கிறான்.

10. உங்களிடம் இருக்கும் பொருள்கள் உங்களுக்கு ஆண்டவனால் விலையின்றி அளிக்கப் பெற்றவை; நீங்களும் அவற்றை மற்றவர்களுக்கு அவ்வாறே கொடுங்கள்.

11. மற்றவர்கள் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டு மென விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

12. கேட்டிற்கு அழைத்துச் செல்லும் வழி அகன்று பரந்ததாக இருக்கிறது; அதன் வழியாய் உட்செல்கிறவர்கள் பலர். உயர் வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் பாதை குறுகலாயும் ஒடுக்கமாயும் இருக்கிறது; இவ் வுண்மையைக் கண்டு நடப்பவர்கள் சிலரே.

13. உங்கள் இதயம் உலகக் கவலைகளினால் பாக மடையாதபடி எச்சரிக்கையா யிருங்கள்!

14. இறைவ னிடத்தில் அன்பா யிருங்கள்; கடுகளவு அன்பு உங்களுக்கு இருந்தால், இந்த மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொன்னால், அது அப்புறம் போகும்.

15. உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக.

—(இயேசு நாதர் அருள்வாக்குகள்)

——சச்சிதானந்தம்.

## "முல்லைக் கொடி"

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில், புரியும் வகையில்,
உரிய விலையில்,
பலதுறைக் கருத்தில்,
சீர்திருத்த முறையில்,
சுவைப் பண்பில், பணி உருவில்
வெள்ளிக் கிழமைதோறும்
வெளிவரும்
ஒரு பெருந்தன்மையான
உணர்ச்சி வெளியீடு!

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4
வெளிநாட்டுக்கு ரூ. 5

குறிப்பு :—

குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ 3 மட்டும்.


---

### இதழ் விற்பனையாளர்

எல்லா ஊர்களிலும் தேவை;
ஆறில் ஒன்று கழிவு தரப்பெறும்.
இசைந்த முன்பணத்துடன்
தேவைக்கு எழுதுக!

---

### விளம்பரத் திட்டம்

**உள் பக்கம் :**

ஒரு பத்தியில் ஓர் அங்குலம் ஒரு தடவைக்கு ரூ. $1\frac{1}{2}$. நீண்ட கால ஒப்பந்தங்களுக்கு ரூ. 1.

கு-பு.—நான்கு அங்குலத்துக்குக் குறையாத விளம்பரமும், ஓர் ஆண்டுக்குக் குறையாத ஒப்பந்தமும் முதன்மையாகக் கவனிக்கப்பெறும்.

**மேல் பக்கம் :**

முழுப் பக்கம் ஒரு தடவைக்கு ரூ. 30
அரைப் பக்கம் ,, ,, ரூ. 16
ஒரு பத்தி ,, ,, ரூ. 12

கு-பு.—தொடர்ந்த விளம்பரங்களுக்கு, கட்டண எளிமை கருதப்பெறும்.

---


# குருகுலம், மாம்பாக்கம்;

( வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி )

மதுராந்தகம் (அஞ்.)

இது,

திருக்குறள் மறைக்குச்

## செய்கை நிலையம்.

நாட்டு மக்கள், 'மொழி' 'கலை' 'தொழில்' 'அருள்' 'பணி' என்னும் ஐவகை வாழ்வியல் திறமைகளிற் சிறந்து திகழ்வதற்கு முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம், நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம், தொழிலகம், அருள் நிலையம், உணவு விடுதி முதலிய பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

**வாழி, மன்பதை!**

---

### குருகுலத்தில் உணவு விடுதி

- பிள்ளைகள், பண்பிலும் திறமையிலும் இளம்பருவத்திலிருந்தே பழக்கம் பெற, குருகுல வாழ்க்கைதான் சிறந்தது!
- சுவைபொருந்திய நல்வாழ்க்கையைச் சிறு பருவத்திலேயே உருவாக்கிக்கொள்ள, எப்போதும் குருகுலச் சூழலே ஏற்றது.
- மதுராந்தகம் உயர்நிலைப்பள்ளி முதலிய அண்மையிடங்களிற் சென்று கல்வி பயில்வோர், குருகுல விடுதியில் இருக்க விரும்பினால், அவர்க்கும் இடம் அளிக்கப்பெறும்.
- உணவுத் தட்டும் விலையுயர்வும் உள்ள இக் காலத்தில் ஆண்டுக்கு ரூ. 200-க்கு மேற்படாத குறைந்த செலவிலும், விடுதியிற் கலந்து கொள்ள வாய்ப்புண்டு.
- தூய்மையிலும், பணியிலும், ஒருமையிலும் ஆர்வமுடையோர்க்குக் குருகுல இல்லத்தின் வாயில் என்றுந் திறந்திருக்கின்றது!


பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)